DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-45/2023

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.மரியம் ஆயிசா | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accued absent. Petition filed U/s.317 Cr.P.C and allowed)

06.02.2026- 01.35 PM

முதல் விசாரணை:-

1. நான் வாலிநோக்கம் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்துவீட்டக்காரர் ஆவார். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 எனது அக்கா ஆவார்.

2. கடந்த 09.04.2023ம் தேதியன்று எனது அப்பா கடற்தொழிக்கு சென்றுவிட்டதால் எனது அம்மா ஒத்தையில் இருக்கிறார் என்று நானும், எனது அக்கா அல்காமியாவும் எனது அம்மாவின் வீட்டில் படுததிருந்தோம் எனது அம்மாவிற்கு சொந்தமான ஒரு பவுன் தங்கச்செயினை எனது அம்மா பர்சில் வைத்து பீரோவில் வைத்திருந்தார். அன்று இரவு நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது இரவு 11.45 மணியளவில் காற்று இல்லாதால் கதவை திறந்து கொண்டு தூங்கியிருந்தோம். அப்போது எதிரி சதாம் உசேன் எங்களது வீட்டின் பீரோவை திறந்து தங்க நகையை எடுத்திருந்தார். சத்தம் கேட்டு எழுந்து பார்த்ததவுடன் அவர் நகையை அங்கேயே வைத்து விட்டு ஓடிவிட்டார். இது தொடர்பாக மறுநாள் எனது அம்மா புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.06 22:43:28 +0530